சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - கரூர் மாவட்டத்தில் துவங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 2023-2024-ஆம் ஆண்டிற்கான கூடுதல் வரவு – செலவுத் தேவைகளுக்காக ரூ.48,00,000/- நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (ப.க.) துறை**

அரசாணை (நிலை) எண். 195

நாள்: 30.08.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
ஆவணித் திங்கள்–13 ஆம் நாள்

படிக்க-

1. அரசாணை (நிலை) எண். 256, வேளாண்மை – உழவர் நலத் (பக) துறை, நாள் 23.12.2021.
2. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடித எண். B1 / AC&RI, Karur / Grants-in-Aid / Budget Requirement / 2022 – 2023, நாள் 24.02.2023 மற்றும் 25.05.2023.

*****

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை – உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"1. தற்போது, வேளாண் கல்வி மற்றும் வேளாண் ஆராய்ச்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரியில் புதியதாக அரசுத் தோட்டக்கலைக் கல்லூரி துவங்க அறிவிக்கப்பட்டது. வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, 2021 – 2022-ஆம் ஆண்டில் கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்."

..2..

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பார்வை (1)-ல் படிக்கப்பட்ட அரசாணையில், இன்னபிறவற்றுடன், ரூ.10 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டத்தில் புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கும் மற்றும் அப்புதியக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒதுக்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை (2)-இல் படிக்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது கருத்துருவில், 2022-2023-ஆம் ஆண்டிற்கான கூடுதல் வரவு-செலவுத் தேவைகளுக்காக ரூ.1,86,10,000/-ஐ பின்வரும் பொருண்மைகளில் வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளார்:-

| வ. எண் | பொருண்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | **அ. கல்விசார் நடவடிக்கைகள்** | |
| | i. உழவுச் சூழலியல், மண் அறிவியல், மரபியல், உயிரி தொழில்நுட்பம் மற்றும் விதை தொழில்நுட்ப ஆய்வகம், தோட்டக்கலை, தாவர நோயியல், வேளாண் நுண்ணுயிரியல் மற்றும் வேளாண் பூச்சியியல் ஆகியவற்றுக்கான ஆய்வகத்தை நிறுவுதல். | 49,56,000 |
| | ii. வகுப்பறை, பயன்பாட்டு அறை, தேவையான மரப்பொருட்களுடன் கூடிய தேர்வுக் கூடம், மாணவர்களுக்கான இணையவழி கற்றல் மையம் மற்றும் மொழி ஆய்வகம் ஆகியவற்றை அமைத்தல் | 38,00,000 |
| 2. | **ஆ. அலுவலகத் தேவைகள்** | |
| | எழுதுபொருட்கள் | 2,50,000 |
| 3. | **இ. தங்கும் விடுதி தேவைகள்** | |
| | விடுதிக்கு தேவையான பாத்திரங்கள் வாங்குதல் மற்றும் மாணவர்கள் சாப்பிடுவதற்கான வசதிகளை உருவாக்குதல் | 5,00,000 |
| 4. | ஈ. புதிய வாகனம் (குளிரூட்டி இல்லாப் பேருந்து) | 50,00,000 |

| | | |
|---|---|---|
| 5. | உ. தொடர் செலவினங்கள் | |
| | வாடகை / மின்கட்டணம் / தண்ணீர் கட்டணம்/ ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கான ஊதியம் / வாகன எரிபொருள் மற்றும் பராமரிப்புக் கட்டணம் / பயணச் செலவுகள் போன்றவை. | 41,04,000 |
| மொத்தம் | | 1,86,10,000 |

4. மேற்காணும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேற்படி கரூர் மாவட்டத்தில் புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 2023-2024-ஆம் ஆண்டிற்கான கூடுதல் வரவு – செலவுத் தேவைகளுக்காக ரூ.48,00,000/- (ரூபாய் நாற்பத்தி எட்டு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் பட்டியலில் உள்ள இனங்களுக்கு செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது:-

| வ. எண் | பொருண்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மரப்பொருட்கள் | 10,00,000 |
| 2. | ஆய்வக உபகரணங்கள் | 10,00,000 |
| 3. | வாகன வாடகை | 5,00,000 |
| 4. | கணினி, அச்சுப்பொறி மற்றும் புகைப்பட நகலெடுக்கும் இயந்திரம் | 5,00,000 |
| 5. | உணவு | 8,00,000 |
| 6. | எதிர்பாராச் செலவினங்கள் மற்றும் பிற | 10,00,000 |
| மொத்தம் | | 48,00,000 |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2415. வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் - 01. பயிர் வளர்ப்பு – 120 - ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AK. வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவுவதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உதவித் தொகை - 309. உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(IFHRMS த.தொ.கு. 2415 -01- 120- AK 30903) - ரூ.48,00,000/-

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.48,00,000/-ஐ 2023-2024-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2023 – 2024 -ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி எடுத்துச் செல்லப்பட வேண்டும். மேலும், இச்செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வ.செ.பொ.1 / வேளாண்மை –உழவர் நலன்) துறைக்கு அனுப்புமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.277/ADS(GKT)/2023, நாள் 28.08.2023-இல் வழங்கிய ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.814 (எண்ணூற்று பதினான்கு) (IFHRMS ASL No.2023080814)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி.சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
வேளாண்மை ஆணையர், சென்னை-600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641 013.
முதன்மை மாநில கணக்காயர் (A&E/ Audit / AAD/ G&SSA / E&RSA),
சென்னை-600018
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641 018.
இயக்குநர், உள் தணிக்கைத்துறை, சென்னை- 600 108.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை-600 009.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.

நிதித் (வேளாண்மை - உ ந / வ.செ.பொது-I / II / வ.வ -I) துறை, சென்னை-600 009.

வேளாண்மை – உழவர் நலத் (வ (ம) தி / அ.ந.மு.3) துறை, சென்னை-600 009.

கோப்பு எண்.3794838/பக/2022.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(செ.சரவணன்)

அரசு சார்புச் செயலாளர்

30/8/2023